# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, மாகாண சபைகள் (சம்பளங்களையும் படிகளையும் கொடுப்பனவு செய்தல்) சட்டம்

---

*[1988 நவம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988, நவம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, மாகாண சபைகள் (சம்பளங்களையும் படிகளையும் கொடுப்பனவு செய்தல்) சட்டம்

[1988, நவம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ. 29/88
1846

**மாகாணத்தின் ஆளுநர், முதலமைச்சர் என்போருக்கும், மாகாணத்தின் அமைச்சர்கள் சபை உறுப்பினர் ஒருவருக்கும், அத்துடன் மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கும் கொடுக்கப்பட வேண்டிய சம்பளங்களுக்கும், படிகளுக்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச் சட்டம் 1988 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க மாகாண சபைகள் (சம்பளங்களையும் படிகளையும் கொடுப்பனவு செய்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. விடயத்திற்கேற்ப— **மாகாணசபைகளின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், சபையின், அமைச்சர்கள் சபையின் உறுப்பினர்கள், அத்துடன் மாகாணசபை உறுப்பினர்கள் என்போருக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும்.**

(அ) மாகாணமொன்றின் ஆளுனரது நியமனத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது தேர்தல் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய ஆளுநர், அமைச்சரவையின் அமைச்சர் ஒருவருக்குத் தற்போது கொடுபடற்பாலதான மாதாந்தச் சம்பளத்திற்கும் ; ஏனைய எல்லாப் படிகளுக்கும் சமமானதொரு மாதாந்தச் சம்பள படிக்கொடுப்பனவுக்கு உரித்துடையவராதல் வேண்டும் ;

(ஆ) முதலமைச்சர் ஒருவரது நியமனத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது தேர்தல் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அத்தகைய முதலமைச்சர், (அ) என்னும் பந்தியின்கீழ் மாகாணமொன்றின் ஆளுநரொருவருக்குக் கொடுபடற்பாலதான மாதாந்தச் சம்பளம், ஏனைய படிகள் என்பவற்றிலிருந்து,ஐம்பது ரூபாய் பணத்தொகையைக் கழித்துவரும் தொகைக்குச் சமமானதொரு மாதாந்தச் சம்பள படிக்கொடுப்பனவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(இ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் உறுப்பினர் ஒருவரின் நியமனத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அல்லது தேர்தல் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அத்தகைய உறுப்பினர் பிரதி அமைச்சர் ஒருவருக்குத் தற்போது கொடுபடற்பாலதான மாதாந்தச் சம்பளத்திற்கும் ஏனைய எல்லாப் படிகளுக்கும் சமமான மாதாந்தச் சம்பள படிக்கொடுப்பனவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஈ) மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவரது நியமனத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அல்லது தேர்தல் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினரொருவருக்குத் தற்போது கொடுபடற்பாலதான மாதாந்தச் சம்பளத்தினதும் ஏனைய எல்லாப் படிகளினதும் ஐம்பது சதவீதத்திற்குச் சமமான மாதாந்தச் சம்பள படிக்கொடுப்பனவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

2—எ 101460—3,015 (08/88)

சம்பளங்களும் படிகளும், மாகாணமொன்றின் மாகாண நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமாதல்வேண்டும்.

3. ஒரு மாகாணத்தின் முதலமைச்சருக்கு, மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் உறுப்பினரொருவருக்கு அத்துடன் ஒரு மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவருக்கு இச்சட்டத்தின்கீழ் கொடுபடற்பாலனவான சம்பளங்களும் படிகளும் அத்தகைய மாகாணத்தின் மாகாண நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமாதல் வேண்டும்.